**Master Of Arts :2011-2012**

**Modern trends of Islam: ISC-601**

# ISLAMIZATION *என்பதன் மூலம் கருதப்படுவது யாது? அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் ஏன் அவசியப்படுகின்றது என்பதைப் பற்றி ஆராய்க!*


*மாணவர் பெயர்: எம்.ஜே.எம். ரிஸ்வான்*

*பதிவு இலக்கம்:* HD/ MA/ 08-09-/559

*விரிவுரையாளர் : எம். ஐ. அப்துல் பாரி* (MA,MPhil)

***(தலைவர், அரபு இஸ்லாமிய நாகரீகத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)***

# முன்னுரை

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கு உரித்தானது. அவனது அருளும் சாந்தியும் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் இஸ்லாத்தின் தூதை ஏந்திச் சென்ற நபித்தோழர்கள் அனைவர் மீதும் நிலையாக உண்டாகட்டுமாக!

இஸ்லாம் இறை மாரக்கமாகும். அது எல்லாக் காலத்திற்கும் பொருத்தமான அம்சங்களையும் வழிகாட்டல்களையும் உள்ளடக்கி இருக்கின்றது என்பதற்கு எண்ணற்ற உதாரணங்களைக் குறிப்பிட முடியும்.

அடிப்படையில் இருந்து விலகிச்செல்லாத நெகிழ்ந்து கொடுக்கும் போக்கு இஸ்லாத்தின் தனித்தன்மைகளில் ஒன்றாகும். அந்த வரிசையில் இஸ்லாமியமயமாக்கல் என்ற வழிமுறையும் ஒன்றாகும். அது ஏன்? எப்படி அவசியப்படுகின்றது? அதன் முன்னோடி சிந்தனையாளர்கள் யார் என்பது பற்றிய சுருக்கமான பார்வையை "ISLAMIZATION" ***என்பதன் மூலம் கருதப்படுவது யாது? அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் ஏன் அவசியப்படுகின்றது என்பதைப் பற்றி ஆராய்க!*** என்ற தலைப்பின் ஊடாக பின்வரும் தலைப்புக்களில் முடியுமான அளவு முயற்சி செய்து தொகுத்தளித்துள்ளேன். அதில் சரியான போக்கை நான் கைக் கொண்டமைக்குரியவனாக அல்லாஹ்வே அருள் செய்யப்போதுமானவன். இவ்வாக்கம் பின்வரும் தலைப்புக்களில் பேசப்பட்டுள்ளது.

- ***அறிமுகம்***
- ***சொற்பிரயோகத்தை முதன் முதலில் உபயோகித்தவர்***
- ***أسلمة المعرفة வின் தேவை எவ்வாறு உணரப்பட்டது ?***
- ***வரலாற்றுப் பின்னணி என்ன ?***
- ***أسلمة என்ற பிரயோகத்திற்கு எதிரான குறிக்கீடு***
- ***(أسلمة المعرفة) விற்கான ஆய்வு மையமும் அதனை அமுலாக்கல் செய்வதும்***
- ***இஸ்லாமிய நீரோட்டத்தில் இஸ்லாமியமயமாக்கல் ஓர் பார்வை***
- ***«أسلمة المعرفة»வின் அவசியம் என்ன? அதன் தேவை எப்போது உணரப்பட்டது?***
- ***"أسلمة المعرفة" அவசியத்தை உணர்ந்த இஸ்மாயீல் ∴பாரூகி அவர்கள்.***
- ***அறிவை இஸ்லாமிய மயமாக்கல்***

- **இஸ்லாஹ் - தஜ்தீத் இஸ்லாமியமயமாக்கல் ஆகியவைகளுக்கிடையிலான தொடர்பு பற்றிய அம்சங்கள்.**
- **தஜ்தீதின் வரைவிலக்கணம்**
- **தஜ்தீத் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள்**
- **தஜ்தீத் ஏன் அவசியப்படுகின்றது?**
- **தஜ்தீத் தொடர்புபட முடியாத அம்சங்கள்.**

மாணவர் பெயர்: எம்.ஜே.எம். ரிஸ்வான்

பதிவு இலக்கம்: HD/ MA/ 08-09-/559

# அறிமுகம்

அரபு மொழியில் **الأسلمة** என்ற சொற்பிரயோகத்தை ஆங்கிலத்தில் islamization, islamination என்றும், இஸ்லாமியமயப்படுத்தல், இஸ்லாமியமயமாக்கல் என்றும் மொழியாக்கம் செய்கின்றனர்.

ஒரு மதத்தின் சிந்தனையின் பக்கமாக மாறுவதற்குரிய தனிமனிதன், அல்லது ஒரு குழு, அல்லது குறித்த ஒரு அமைப்பின் நடவடிக்கையைக் குறிக்கவும் அல்லது இஸ்லாமிய மார்க்கத்தின் பக்கம் திரும்புவதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதைக்குறிக்கும் ஒரு பரிபாசையாகும்.

- சிலர், தன்ஸீர்- التنصير கிரிஸ்தவராக மாற்றுதல், அல்லது கிரிஸ்வமயமாக்கல்,
- தஹ்வீத்- **.** التهويد யூதராக மாற்றுதல் யூதமயமாக்கல்,
- அல்மனா- .العلمنة தாரான்மைவாத சிந்தனையாளராக மாற்றுதல்- அல்லது மதச்சார்பற்ற சிந்தனையாக மாற்றுதல் போன்ற வழிமுறையின் தொடரில் அமைந்ததுதான் இந்த islamization, islamination என்றும், **الأسلمة** இஸ்லாமியமயப்படுத்தல், இஸ்லாமியமயமாக்கல் என்றும் கருத்துக் கூறுகின்றனர்.
  - மற்றும் சிலர் அரபிமயமாக்கல்- அல்லது அரபு மொழிக்கு மாற்றுதல் என்ற பொருளில் அமைந்த , تعريب த.ீரீப் என்ற சொற்பிரயோகம் போன்ற இந்த الأسلمة வை நோக்குகின்றனர்.
  - இதன் தொடரில் சிலர் **أسلمة السياسة** அரசியலை இஸ்லாமியமயப்படுப்பதல் என்றும்,
  - **أسلمة الاقتصاد** பொருளாதாரத்தை இஸ்லாமியமயப்படுத்தல் என்றும் **أسلمة البنوك** வங்கிகளை இஸ்லாமியமயப்படுத்தல் என்றும் **أسلمة العلوم** கல்வியை இஸ்லாமியப்படுத்தல் என்றும் சொற்பிரயோகங்களைப் பயன்படுத்தினர்.
  - இதனால் நவீன நடைமுறைக்குள் இஸ்லாமிய சிந்தனை கலந்த நடைமுறையினைக் கொண்டுவந்த வட்டி இல்லா இஸ்லாமிய பொருளாதாரத்தில் பாரியளவு முன்னேற்றம் காணப்பட்டது. சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள இஸ்லாமிய எழுச்சியின் பின்னணியில்தான் இவை நடைமுறைக்கு வந்தது என அறிய முடிகின்றது. (1)
  - இதன் தொடரில் அமைந்த பிரயோகமான இஸ்லாமிய ஜனநாயகம், இஸ்லாமிய தனிஉடமை வாதம், இஸ்லாமிய முதலாளித்துவவாதம் போன்ற பிரயோகங்களை முன்வைத்தாலும் அவை இஸ்லாத்துடன் இணைத்துப் பேச முடியாத ஒரு பிரயோகம் என மறுத்துரைக்கப்படுவதையும் பார்க்கின்றோம். (2)

------------------------

1- أسلمة - ويكيبيديا، الموسوعة الحرة - ويكيبيديا Wikipedia ar.wikipedia.org/wiki/**أسلمة**

2- http://www.alukah.net/Sharia/0/7442/#ixzz2SxfUhjiO

## சொற்பிரயோகத்தை முதன் முதலில் உபயோகித்தவர்

ஐ.∴பர் ஷேக் இத்ரீஸ் என்பவர்தாம் இதனை முதன் முதலில் 1970களில் அமெரிக்காவில் நடைபெற்ற இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச மாநாட்டில் முன்மொழிந்ததாகக் கூறப்படுகின்றது. **(أسلمة المعرفة) என்ற சொற்பிரயோகம் அவரால் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (1)**

**இஸ்லாமிய ஆய்வாளரான இஸ்மாயீல் ராஜீ ∴பாருகி என்பவர் இஸ்லாமபாத்தில்** இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச மாநாட்டில் **1982 –ஜனவரி (ரபீவுல்) மாதம் நடைபெற்ற ஆய்வுக்கருத்தரங்கில் இது பற்றிய தேவையினை எடுத்துக்கூறும் போது அவரால் உபயோகிகப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. (2) (أسلمة المعرفة - (ج 1 / ص 1**

இஸ்மாயீல் ∴பாருகி அவர்கள் இது பற்றிய ஆய்வினை ஆங்கிலத்தில் எழுதிய போது அதனை அபூசுலைமான், தாஹாஜாபிர் அல்வானி போன்றோர் மொழியாக்கம் செய்திருந்தாகக் கூறப்படுகின்றது.

இஸ்மாயீல் ∴பாருகி அவர்கள் தனது ஆய்வில் இரு பிரதான கருத்துக்களை முன்வைத்திருந்தார்கள்.

(1) இஸ்லாமிய அறிவியல் என்பது மதச்சார்பற்ற சிந்தனையுடன் கலந்து காணப்படுவது

(2) இஸ்லாமிய அறிவியலை தெளிந்த நீரோட்டத்தில் கொண்டு செல்லும் ஆற்றல் இல்லாது காணப்படுவது ஆகிய இரு பிரதான கருத்துக்கள் மன்வைக்கப்பட்டிருந்ததை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அத்துடன் அவற்றிற்கான தீர்வினை அறிஞர்கள் இஸ்லாலமிய ஷரீஆ அறிவோடு சமகால நவீன உலகியல் அறிவைக் கலந்து எவ்வாறு அதற்கான தீர்வினைப் பெறலாம் என்ற ஆலோசனை. (3)

-----------------------

1- أسلمة - ويكيبيديا، الموسوعة الحرة – ويكيبيديا 1- Wikipedia ar.wikipedia.org/wiki**أسلمة**/

2- அ. இ. தளம்.

3- **أسلمة المعرفة لعلي بن نايف الشحوذ - (ج 1 / ص1 ) من مكتبة الشاملة**

## أسلمة المعرفة வின் தேவை எவ்வாறு உணரப்பட்டது ?

இஸ்லாமிய கிலா.:.பத் 1924ல் வீழ்ச்சியடைவதற்கு முன்னால் முஸ்லிம் உலகு சிந்தனாரீதியான பாரிய உள், வெளி சவால்களுக்கு முகம் கொடுத்திருந்தது. அப்போது இஸ்லாமிய தனித்துவத்தைப் பேணுவதில் குறியாக இருந்த முஸ்லிம் அறிஞர்கள் மேற்கின் சிந்தனைகளை முழுமையாக நிராகரித்தனர். மேற்கில் இருந்து வரும் எதையும் அங்கீகரிப்பதில்லை என்ற முடிவில் இருந்தனர். இஜ்திஹாதின் வாசலை மூடியதன் விளைவாக அறிவியல் ஆராய்ச்சியில் ஒரு மந்த நிலை காணப்பட்டது.

அதனால் நவீன ஆயுதங்கள், கண்டுபிடிப்புக்களுடன் மேற்குலகு முன்னேற்றப்பாதையில் பயணித்துக் கொண்டிருந்த போது அவர்களின் முன்னேற்றம் சமயத்திற்கு முரண்பட்டதாகவும் கூடப்பார்க்கப்பட்டது. இந்நிலையில் அறிவியல் ஆராய்ச்சிப் பாதையைப் ஐரோப்பியருக்கு கற்பித்த ஆசான்களான முஸ்லிம்கள் அதில் பாரிய பின்னடைவில் காணப்பட்டனர். அது முஸ்லிம் உலகின் வீழ்ச்சிக்கான முக்கிய காரணிகளில் ஒன்றாக விளங்கியது.

எகிப்தை ஆக்கிரமித்த பிரான்ஸியர் எகிப்திய மாணவர்கள் பலரைக் கல்வி கற்பதற்காக பிரான்ஸுக்கு அனுப்பி மூளைச்சலவை செய்தனர். அவர்கள் மேற்கில் கற்ற அறிவு, அதன் தொழில் நுட்ப அறிவால் கவரப்பட்டனர். இஸ்லாம்தான் தமது பின்னடைவிற்கான மதமாக விளங்கிற்று எனப் பிரச்சாரமும் செய்தனர். அதனை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யும் பணி அறிஞர்களால் முன்னெடுக்கப்பட்டது. காலப் போக்கில் அதற்கு பயன் கிடைத்தது. அதன் பயன்களில் ஒன்றுதான் இஸ்லாமியமயமாக்கலை அங்கீகரித்தலாகும். (1)

## வரலாற்றுப் பின்னணி என்ன ?

எகிப்திய ஆட்சியாளர்களில் ஒருவரான முஹம்மத் அலி பாஷாவின் பிள்ளைகள் அந்நாட்டை சில தசாப்தங்கள் ஆட்சி செய்த போது அரபு தொலைத் தொடர்பு சாதனங்களில் அடிக்கடி தாராண்மைவாதம், மேற்கத்தியவாதம் போன்ற சொற்பிரயோகங்கள் வெளிவந்தன. அதற்கு மறுப்புக் கூறும் வகையில் அரபிகள் சமூகம் தமது பழமையான பண்பாடுகள், கலாசாரங்கள் நாகரீகத்தின் பக்கம் திரும்பிவாழ்வதைக் குறிக்க இந்த சொற்பிரயோகம் நடைமுறைக்கு வந்தது என்றும் ஒரு புதிய நடைமுறையைத் திணிப்பதற்கான ஒன்றல்ல என்றும் கூறப்படுகின்றது.

அவ்வாறுதான் இஸ்லாமிய நம்பிக்கை கோட்பாடு, கலாசாரம், அரசியல், பொருளாதாரம், ஆகிய நடைமுறைகளை பொதுவான, தனிப்பட்ட சமூகவாழ்வில் கடைப்பிடிப்பதற்கு அழைப்பதையும் குறிக்கின்றது. (2)

-------------------------------

1- **http://www.ahlalhdeeth.com/vb/showthread.php?t=248209 (சிறு மாற்றத்துடன்)**

2- أسلمة - ويكيبيديا، الموسوعة الحرة – ويكيبيديا 1- Wikipedia ar.wikipedia.org/wiki/**أسلمة**

## أسلمة المعرفة வின் முக்கிய பணி

இதனைக் கொண்டு أســلمة العلــوم **அஸ்லிமதுல் உலூம்** - அறிவை இஸ்லாமியமயமாக்கல் என்பதுதான் நோக்கமாகும். இதில் இஸ்லாமிய கல்வி சார்ந்த அனைத்தையும் இஸ்லாமியமயமாக்கல் செய்வதை நோக்காகக் கொள்கின்றனர்.அதனை இன்னும் தெளிவாகக் கூறுவதாயின்

إن مهمة أسلمة المعرفة (أعنى بالتحديد أسلمة العلوم ، أو بمعنى أوضح ، إنتاج كتب دراسية جامعية في نحو عشرين علما طبقا للتصور الإسلامي

இஸ்லாமிய கண்ணோட்டத்திற்கு அமைவாக இருபது கலைகளை உள்ளடக்கியதாக பாடநூல்களை உருவாக்குதல். எனக் குறிப்பிடும் ஆய்வாளரான நாயி.ஃப் இது மிக்கடினமான பணியாகும். துரதிஷ்டம் என்னவென்றால் முஸ்லிம்களிடம் இவ்வாறான பிரச்சினைகளை ஆய்வு செய்கின்ற ஒரு மத்திய நிலையம் இல்லாமையாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார். (1)

## أسلمة என்ற பிரயோகத்திற்கு எதிரான குறிக்கீடு

1- அரபு மொழியில் (أسلم) என்ற சொற்பிரயோகம் ஒருவர் இஸ்லாத்தை ஏற்கொள்வதைக் குறிக்கும் சொல்லாகும். அதனால் أسلمة என்ற சொல்லை இஸ்லாமியமயமாக்கல் என்பதைக் குறிக்கப் பயன்படுத்துவது தவறாகும். (أسلم) என்ற சொல்லானது ஒருவரை எதிரியிடம் ஒப்படைப்பதையும் குறிக்கும். அதே (أسلم) என்ற சொல் தன்வினைச் சொல்லாக வரும்போது வழிப்பட்டான் என்ற பொருளிலும், பிறர்வினையாக வருகின்ற போது முன்கூட்டிக் கடன் வழங்கினான் என்ற கருத்தையும் தரும் (2)

**(أسلمة المعرفة) என்ற பிரயோகத்தை அறிமுகப்படுத்துவதில் அறிஞர் அபூ சுலைமான் என்பவரின் பங்களிப்புப் பற்றியும் கூறப்படுகின்றது. அந்தப் பிரயோகம் அரபி இலக்கண இலக்கிய முறைக்கு மாற்றமானது என்று** விமர்சனம் செய்யப்பட்டாலும் ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பரிபாசை. அவ்வாறு உருவாக்கப்படுவது இஸ்லாத்தில் தடை செய்யப்பட்ட ஒன்று அல்ல என்ற கருத்தும் அங்கீகரிக்கத்தக்கதாகும். (3)

---

1- موسوعة البحوث والمقالات العلمية موسوعة البحوث والمقالات العلمية لعلي بن نايف الشحوذ –(ج / ص **1** ) -1

**2–** الحضارة الإسلامية بين أصالة الماضي وآمال المستقبل لعلي بن نايف الشحوذ - (ج 7 / ص 15 **–2**

3- http://www.alukah.net/Sharia/0/7442/#ixzz2SxfUhjiO

## (أسلمة المعرفة) விற்கான ஆய்வு மையமும் அதனை அமுலாக்கல் செய்வதும்

சமூகத்தை சிந்தனா ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் மாற்றும் நோக்குடன் தொடங்கப்பட்ட இந்த சிந்தனைக்கான வரைபடத்தை அமுல் செய்வதற்கு **الْمَعهدُ العالَميُّ للفِكْر الإسلامي** இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச ஆய்வு நிலையம். கலாநிதி இஸ்மாயீல் ∴பாருக்கி என்பவரால் கி.பி. 1980 களில் நிருவப்பட்டது. அதன் பிரதான நோக்கம் இஸ்லாமியமயமாக்கல் என்ற கருப் பொருளின் அடிப்படையில் மேற்கின் சிந்தனைகளை உள்வாங்கி இஸ்லாத்திற்கு முரண்பாடற்ற வகையில் செயற்படுத்தும் சிந்தனைகளை முஸ்லிம் உம்மத்திற்கு முன்வைப்பதாகும். (1) **அதனை நடைமுறைப்படுத்துவது பற்றி இவ்வாறு கூறப்படுகின்றது.**

**أمَّا المجال العمَلي للمشروع، فيكون بإنتاج كتب أكاديمية في مختَلِف التخصُّصات المعتمَدة اليوم، بَيْدَ أن التَّكامُلَ المعرفي لا يكون بامتزاج التُّراث الإسلاميِّ مع الفكر الغَرْبِيِّ، بل بِرَصْد مَجموعةٍ من الضوابط لِخَلق منهجٍ يوجِّه العلوم برؤية إسلاميَّة، لِخِدْمة الدِّين لا لِمُعاداته؛ أيْ: طَرْح النَّتائج العِلْميَّة الحديثة بِصِيَغ متكاملة مع الدِّين وفق معايير علميَّة، فتكون للاستشهاد بِها له لا عليه، كما حاول دُعاة العلمنة والإلْحاد من قلب الحقائق العلميَّة بِمَفاهيمَ مُعاديةٍ للأديان.**

இன்று நடைமுறையில் காணப்படும் பல்வேறுபட்ட விசேட துறைகளை உள்ளடக்கிய கற்கைள் சார்ந்த நூல்களை உருவாக்குதன் மூலம் சாத்தியப்படுத்தல். இருப்பினும், பூரணத்துவம் சார்ந்த அறிவானது இஸ்லாமிய சிந்தனையை மேற்கின் சிந்தனையுடன் கலந்து விடுவதால் ஏற்படமாட்டாது. மாற்றமாக இஸ்லாமியப் பார்வையுடன் கலந்த அறிவுகளை நெறிப்படுத்தும் ஒரு வழிமுறையைப்படைத்தல் வேண்டும். மார்க்கத்திற்கு சேவை செய்வதற்காகவே அன்றி அதற்கு முரண்படுவதற்காக அல்ல. அதாவது: மார்க்கத்துடன் ஒன்றியவாறு அறிவியல் அளவீடுகளின் அடிப்படையில் நவீன அறிவியல் சார்ந்த முடிவுகளை வெளிப்படுத்துவதாகும். இது மார்க்கத்திற்கான ஆதாரம் தேடுவதாக இருக்குமே தவிர, அதற்கு எதிராக இருக்க மாட்டாது. தாராண்மை வாதிகள், மதச்சார்பற்றவர்கள், நாஸ்தீக சிந்தனையாளர்கள் என்போர் அறிவியல் சார்ந்த உண்மைகளை தலைகீழாக்கி, சமயக் கண்ணோட்டங்களுக்கு எதிராக கருத்துக்கூற முயற்சிப்பது போன்றல்லாது அமையும். (1)

-----------------------------------

1- http://www.alukah.net/Sharia/0/7442/#ixzz2SxfUhjiO

# இஸ்லாமிய நீரோட்டத்தில் இஸ்லாமியமயமாக்கல் ஓர் பார்வை

இஸ்லாம் குர்ஆன், சுன்னா என்ற அதன் இரண்டு அடிப்படைகள் ஊடாக மாத்திரம் அதன் கோட்பாடுகளை நிறுவவில்லை என்பதை இஸ்லாமியக் கோட்பாடுகளை ஆராய்கின்ற போது அறிய முடிகின்றது. அப்படிக் கூறுவதனால் குர்ஆன் சுன்னாவிற்கு அப்பாற்பட்ட அடிப்படைகள் என்ற புதிய கோட்பாடு தோற்றுவிக்கப்படுவதாக நம்புவது தவறாகும்.

குர்ஆன் சுன்னா என்ற இரண்டு மூலாதாரங்கள் போக அதற்குரிய துணை மூலாதரங்களாக இஜ்திஹாத் மூலம் பெறப்படும் விளக்கங்கள் காணப்படுகின்றன. அவை கால சூழலுக்கு அமைவாக அதன் பொதுத்தன்மைகளைக் கொண்டு இஜ்மா, கியாஸ், மஸாலிஹ் முர்ஸலா, உர்.்.ப், ஆதா, இஸ்திஹ்ஸான் என்ற பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றது.

அவைகளைத்தான் மார்க்கத்தை துறைபோகக் கற்ற அறிஞர்கள் துணை மூலாதரங்கள் - அடிப்படை மூலாதராங்களுக்குரிய துணைகள்- எனக் குறிப்பிடுகின்றனரே தவிர மாற்றமாக குர்ஆன் சுன்னா என்ற இரண்டையும் விட்டுவிட்டு அதற்கப்பாலான ஒரு புதிய கோட்பாட்டை உருவாக்கி அதன் பக்கம் மக்களை அழைக்கவில்லை.

குர்ஆனையும், சுன்னாவையும் ஆய்வு செய்கின்ற போது தனிமனித, மற்றும் பிறசமயத்தவரின் நடைமுறைகள் இஸ்லாமிய நடைமுறைக்கும் முரண்படாதிருக்கின்ற போது அதை இஸ்லாம்

- ✔ அங்கீகரித்துள்ளதைக் காண முடிகின்றது.
- ✔ கஸாமா என்ற ஜாஹிலிய்யக் காலத்தில் இருந்து வந்த குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள்.
- ✔ குழந்தைகள் பிற தாய்மார்களிடம் பால்குடிக்கும் நடைமுறை.
- ✔ ஹில்பு.்.ல் புழுல் அமைப்பு.
- ✔ கணவன் மனைவி குடும்ப உறவின் போது நடந்து கொள்ளும் **அஸ்ல்** முறை.
- ✔ போரின் போது அகழ் தோன்றும் யுத்த வழிமுறை.
- ✔ ராஜதந்திர உறவுகளைப் பேணும் வகையில் மன்னர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் கடிதங்களில்
- ✔ முத்திரைபதிக்கும் நடைமுறை போன்ற இன்னோரன்ன நடைமுறைகளை முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் வஹி இறங்குகின்ற போதே அங்கீகரித்து நடைமுறைப்படுத்தியுள்ளார்கள். அந்த வகையில் நபி (ஸல்) அவர்கள் தடுக்காததும் அல்குர்ஆன் கண்டிக்காததும் இஸ்லாமிய மார்க்கத்தில் அங்கீகாரம் பெற்றவையாகக் கருதப்பட்டன.

இந்த அடிப்படையில் இஸ்லாமியமயப்படுத்தல் என்ற சிந்தனையை அறிஞர்கள் நோக்குவது தவறு என்று வாதிட முடியாது.

ஆரம்ப காலங்களில் ஒட்டகம், கழுதை போன்ற கால்நடைகள் பயணத்திற்கான வாகனங்களாகக் காணப்பட்டன. அவற்றில் பயணம் செய்ய ஆரம்பிக்கும் பொழுது எந்த துஆவை அக்கால மக்கள் ஓதினார்களோ அதைத்தான் இந்த நவீன காலத்தில் உருவாக்கப்பட்டுள்ள அனைத்து வகையான பயண இயந்திரங்களில் பயணிக்கும் போது நாம் ஓதுகின்றோம். அதை ஒட்டகம், அல்லது கழுதை மீது சவாரி செய்கின்ற போது வந்த பிரார்த்தனை என்று யாரும் வாதிடுவது கிடையாது.

அவ்வாறே ஹஜ்காலங்களில் நபி (ஸல்) அவர்கள் ஒட்டகத்தின் மீது இருந்தவாறு **க.ஃபாவைச்** சுற்றி **தவா.ஃப்** செய்தார்கள் என்பதை ஆதாரமாகக் கொண்டு ஒருவர் ஹெலிகொப்டர் மூலம் தவா.ஃப் செய்யலாம் என மார்க்கத்தீர்ப்பு வழங்கினால் அதை மார்க்கத்திற்கு முரணாக ஒரு புதிய தீர்ப்பாக சித்தரிக்க முடியாது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் மாணவர்கள் அவர்களின் பள்ளியில் தங்கிப்படிப்பார்கள். பின்னர் அவர்கள் தமது கிராம மக்களின் அழைப்பாளர்களாகச் செல்வார்கள். என்பதை ஆதாரமாகக் கொண்டு தங்கிப்படிக்கும் முறையை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்காக கல்லூரிகள் நிருவப்பட்டு மாணவர்கள் தங்கி படிக்கும் முறை பின்பற்றப்படுவதை யாரும் புதிய வழிமுறை எனவாதிட முடியாது.

நபி (ஸல்) அவர்கள் காலத்தில் அல்குர்ஆன் நெஞ்சங்களில் மனப்பாடம் செய்யப்பட்டும், வெண்ணிறக்கற்கள், பதனிடப்பட்ட தோல்கள், ஈச்சம் மர மட்டைகள், ஓலைகள் போன்றவற்றில் ஆங்காங்கு பதிவு செய்யப்பட்டிருந்ததை ஒழுங்குபடுத்தப்படாது எழுதப்பட்டிருந்ததை ஒழுங்குற அமைக்கும் பணியை முதலாவது கலீ.ஃபா அபூ பக்கர் (ரழி) அவர்கள் மேற்கொண்டார்கள். அதற்கு ஆரம்பத்தில் எதிர்ப்புக்கள் எழுந்தாலும் அல்குர்ஆனைப் பாதுகாப்பதற்கான அழப்பரிய முற்போக்குச் சிந்தனை என்று சரி கண்டார்கள் நபித்தோழர்கள். குர்ஆனில் எவ்வித மாற்றமும் செய்யாது உள்ளதை உள்ளபடி குர்ஆன் எழுதி முடிக்கப்பட்டது.

அதே குர்ஆன் நவீன அறிவியல் முன்னேற்றத்தின் பயனாக இலத்திரணியல் மூலம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அதன் ஊடாக மக்கள் பார்வையிடும் வசதி, பாராயணம் செய்யும் வசதி செய்து தரப்பட்டிருக்கின்றது. அதில் இருந்து ஒருவர் ஓதுகின்ற போது அச்சிடப்பட்ட குர்ஆனில் இருந்து ஓதுகின்ற போதுதான் நன்மை கிடைக்கும் இதற்கு அல்ல என வாதிடுவது

அறிவுடமையாகாது. ஆனால் அந்த இயந்திரங்கள் ஓதினால் போதும் என வாதிடுவதும் தவறானதாகும்.

நவீன காலத்தில் புதிய புதிய பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. இரத்ததானம், கண்தானம், உறுப்பு தானம், கிட்னி மாற்றம், லை.ஃப் இன்ஸுரன்ஸ் , வங்கியியல் போன்ற இன்னோரென்ன புதிய மார்க்க விவகாரங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

இது போன்ற அம்சங்களை எவ்வாறு இஸ்லாமியமயமாக்கல் செய்வது என்று சிந்திப்பதுதான் இஸ்லாம் காலத்திற்கு பொருத்தமான தீர்வினை வழங்கும் ஒரு மார்க்கம் என்பது ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கு மாற்றமான கருத்துக்களை முன்வைக்கின்ற போது கிரிஸ்தவ மதம் பைபிளுக்கு மாற்றமாக கருத்துதெரிவித்தவர்கள் என விஞ்ஞானிகளை பலர் இம்சித்ததால் நாஸ்தீகம் பிறக்கக் காரணமானது போன்று இஸ்லாத்தை வெறுக்கின்ற, விமர்சிக்கின்ற தலைமுறையினர் உருவாகுவதைத் தடுக்க முடியாது. இஸ்லாமிய மார்க்கம் அனைத்து விவகாரங்களிலும் தீர்வைத் தந்துள்ளது என்பதை உலக மக்களுக்கு எடுத்துக் கூறும் முறைகளில் ஒன்றாகவே இஸ்லாமிய மயமாக்கல் என்பதை நாம் பார்க்க வேண்டும்.

**அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, மற்றும் இஸ்லாமிய வரலாற்று நிகழ்வுகள் போன்ற இன்னோரன்னவற்றை ஆராய்கின்ற போது இஸ்லாமியமயப்படுத்தல் என்ற பிரயோகத்தை அங்கீகரிப்பதற்கான வழக்குகள் இடம் பெற்றுள்ளதையும், அதற்கான அங்கீகாரத்தையும் காணமுடிகின்றது.**

**சில உதாரணங்கள்.**

**وَمَا أَرْسَلْنَا قَبْلَكَ إِلَّا رِجَالًا نُوحِي إِلَيْهِمْ فَاسْأَلُوا أَهْلَ الذِّكْرِ إِنْ كُنْتُمْ لَا تَعْلَمُونَ [الأنبياء : 7] (1)**

**நபியே! உமக்கு முன்னர் வஹி அறிவிக்கும் (தூதர்களாக) அனுப்பியவர்களில் ஆண்களைத் தவிர (வேறு யாரையும்) அனுப்பவில்லை. நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் அறிவுடையோரிடம் நீங்கள் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.**

**மேற்படி வசனம் இஸ்லாமிய அறிவை வஹியின் அடிப்படையில் பெறுவதை வலியுறுத்துவது போன்று துறை சார்ந்த அறிஞர் பெருமக்களிடம் அதுபற்றிய தெளிவைப் பெறுவதை வலியுறுத்துவதாக இஸ்லாமியமயமாக்கல் தொடர்பான அறிஞர்கள் வாதிடுகின்றனர்.**

---------------------------------

1- (அத்: அல்அன்பியா. வச: 7)

அறிவுகள் கலைகளைப் பெறுவதில் அல்லது அறிமுகப்படுத்துவதில் மூலமாக விளங்குவது அது தொடர்பான மூலாதாரா நூல்கள், அறிஞர்கள் என விளங்குகின்றார்கள். மேற்படி வசனம் அல்குர்ஆன் பற்றி அறிஞர்கள் என்று குறிப்பிடாமல் -திக்ர் உடையோர்- எனப் பொதுவாகக் குறிப்பிடுவது யூத, கிரிஸ்தவ அறிஞர்களையே சுட்டிநிற்கின்றது. அவ்வாறு பார்க்கின்ற போது அவர்களிடம் பயன்தரும்படியாகக் காணப்படும் மார்க்கம் அனுமதித்தவைகளைப் பெறுவது அனுமதிக்கப்பட்டதையே உணர்த்துகின்றது. (1)

அறிவு லௌகீகம் சார்ந்ததாக இருப்பின் அதன் துறைகளில், கருதுகோள்களில் நோக்கத்தை நிறைவு செய்யும் அதன் பாடஅமைப்புக்களில் அது பற்றிய தொடர்பற்றவர்களை விடுத்து அது தொடர்பானவர்களிடம் செல்வதே சரியாகும். அறிவினை விருத்தி செய்ய பிற கலைகள், கலாசாரங்கள் மீது தங்கி நிற்பது, அதன் புதிய கண்டுபிடிப்புக்களில் பயன்பெறுவது மாரக்கத்தின் அடிப்படை விதிகளுக்கு மாறுபாடற்றதாக இருப்பின் அது அனுமதிக்கப்பட்டதாகும். (1)

குர்ஆன், சுன்னாவில், இஸ்லாமிய வரலாற்றில் இதற்கு தாராளரமான அனுமதிருத்திருப்பதை முன்னரும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

***கலீமுல்லாஹ் என்ற சிறப்பு பெயர் பெற்ற மூஸா (அலை) அவர்கள், ஹிள்ர் (அலை) அவர்களிடம் "உமக்கு கற்பிக்கப்பட்டதில் பயனுள்ளதை நீர் எனக்கு கற்பிக்கும் நிபந்தனையின் பேரில் நான் உங்களைப் பின்பற்றலாமா? எனக் கேட்டார் .*** (2) இதில் மூஸா நபியின் தரத்தை விடக்குறைந்தவர் என்ற நிலையில் காணப்பட்ட ஹிள்ர் அவர்களிடம் பயனுள்ள கல்வியைக் கற்றுக் கொண்டமை சுட்டிக்காட்டப்படுகின்றது.

அத்துடன், ஆதம் நபியின் இருஆண் மக்களில் ஒருவன் மற்றவனைக் கொலை செய்தான். அவனை எவ்வாறு புதைப்பது என்பது தெரியாது தடுமாறிக் கொண்டிருந்தான். அப்போது காகங்கள் இரண்டு சண்டை செய்கின்றன ஒன்றை மற்றொன்று புதைத்துவிடுகின்றது. இதன் பின்னர்தான் அவன் தனது சகோதரனை எவ்வாறு அடக்கம் செய்யலாம் என்ற உணர்வைப் பெற்றான். இதை அல்குர்ஆன் இவ்வாறு வர்ணிக்கின்றது.

فَبَعَثَ اللَّهُ غُرَابًا يَبْحَثُ فِي الْأَرْضِ لِيُرِيَهُ كَيْفَ يُوَارِي سَوْءَةَ أَخِيهِ قَالَ يَا وَيْلَتَا أَعَجَزْتُ أَنْ أَكُونَ مِثْلَ هَذَا الْغُرَابِ فَأُوَارِيَ سَوْءَةَ أَخِي فَأَصْبَحَ مِنَ النَّادِمِينَ ﴾ [المائدة: 31]

அவ்வேளை, அவன் தனது சகோதரனின் பிரேதத்தை எவ்வாறு புதைக்க வேண்டும் என்பதைக் காண்பிப்பதற்கான பூமியில் (மற்ற காகத்தைப் புதைத்திடத்) தோண்டும் ஒரு காகத்தை அல்லாஹ் அனுப்பி வைத்தான். அவன் எனக்கு ஏற்பட்ட கைசேதமே! இந்தக்காகத்தைப் போன்றாவது நான் இருந்து, எனது சகோதரனின் சடலத்தைப் புதைத்திருக்க வேண்டுமே என்றான். அவன் கைசேதப்பட்டவர்களில் ஒருவனாக மாறினான். (3)

-----------------------------------------

1- http://www.alukah.net/Sharia/0/7442/#ixzz2SxfUhjiO
2- அத்: அல்க.ஃ.ஹ்.ஃ.ப். வச: 66.
3- அத்: அல்மாயிதா: வச: 31.

மேற்படி சம்பவத்தின் மூலம் பகுத்தறிவற்ற ஒரு பறவையின் செயற்பாட்டில் காணப்பட்ட ஒரு நடைமுறை இஸ்லாமிய ஷரீஆவாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதை அறிய முடிகின்றது.

## «أسلمة المعرفة» வின் அவசியம் என்ன? அதன் தேவை எப்போது உணரப்பட்டது?

முஸ்லிம் மாணவர்கள் ஐரோப்பாவிற்கு மேற்கொண்ட கல்விப்பயணத்தின் பின்னணியிலும், அங்குள்ள அறிவியல்பாரம்பரியத்தை அப்படியே கிழக்கின் பக்கம் திருப்ப வேண்டும் என்ற கோஷம் எழுந்தது. அதன் பயனாக இஸ்லாமியமயக்கால் பற்றிய சிந்தனை தோற்றம் பெற்றது என அரபு எழுத்தாளர்களில் ஒருவரான காஸீ கஷ்மீம் என்பவர் குறிப்பிடுகின்றார். இது கிட்டதட்ட மூன்று தசாப்தங்கள் முதல் என்பது அவரது வாதமாகும்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் المعهد العالمي للفكر الإسلامي என்ற இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச கற்கைள் மையம் இதன் முன்னோடியாக விளங்கியதாகவும், அது கி.பி 1981-ம் ஆண்டு தொடங்கப்பட்ட போதும் அதற்கான முழுமையான இலட்சியத்தை அது அடையவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (1) இதன் சிந்தனை முன்னோடிகளாக இஸ்மாயீல் ஃபாரூகி என்பவர் குறிப்பிடத்தக்கவர் என்பதை முன்னர் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் தேவையினை உணர்த்தி «المجلة الأمريكية للعلوم الاجتماعية الإسلامية»، «المسلم المعاصر»،«إسلامية المعرفة» போன்ற மற்றும் பல பத்திரிக்கைகள் மூலம் மலேஸியா, மற்றும் ஈரான் போன்ற நாடுகளில் இந்த சிந்தனை முன்னெடுக்கப்பட்டது.

இஸ்லாம் அனைத்துக்காலத்திற்கும், எல்லாத் தேசத்தவருக்கும் பொதுவான மார்க்கம் என்ற அடிப்படையில் இந்த சிந்தனையாளர்கள் அது பற்றிய சிந்தனைக் கண்ணோட்டத்தை முன்வைத்தனர். இருந்தாலும் இஸ்லாமியக் கண்ணோட்டம் வஹியின் அடிப்படையில், மறுமை நம்பிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும் என்பது அதன் பிரதான வேறுபாடாகும். இயற்கை விஞ்ஞானம் என்பதை இஸ்லாம் மறுக்கின்றது. ஆனால் உலகம் இயற்கையானது என மேற்கின் கொள்கை குறிப்பிடுகின்றது.

இவ்வாறு பார்க்கின்ற போது இஸ்லாத்தின் விஞ்ஞானப்பார்வை என்பது இவ்வுலகை இயக்கும் சக்தியாளனாகிய அல்லாஹ்வின் நிருவாக முறையில் நம்பிக்கை கொள்வதன் அடிப்படையில் அது தோற்றம் பெறுகின்றது. இவ்வுலகு அழிவைத்தழுவும். இருந்தாலும் அது அரசியல், பொருளாதாரம், நிருவாகம், இயற்பியல் என்ற துறை அனைத்திலும் ஒரு ஒழுங்கமைப்பில் நடத்தப்பட வேண்டும் என மேற்கு நம்புகின்றது. அப்படி இருந்தும் இஸ்லாம் ஒழுங்கு முறையான அமைப்பில் செல்வதை ஆதரிப்பதை இத்துறை சார்ந்த அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் **இதில் வெற்றி கொள்ளபட்ட அம்சமாக இஸ்லாமியப் பொருளாதாரம் சுட்டிக்காட்டப்படுகின்றது.**. (1)

-------------------

1- http://www.al-madina.com/node/450683?risala **(சாதாரண மொழி நடை மாற்றத்துடன் தரப்பட்டுள்ளது)**

குறிப்பாக உலக பொருளாதார நெருக்கடிக்குப்பின் இஸ்லாமிய பொருளாதார முறையியல் உலகில் பேசு பொருளாகக் கொள்ளப்படுகின்றது. வட்டியுடன் தொடர்பான நிதி நிறுவணங்கள் கூட அதன் அவசியத்தை உணர்ந்து இஸ்லாமிய வங்கிச் சேவைகளை ஆரம்பித்துள்ளது என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

இஸ்லாத்தை இஸ்லாமியப்படுத்தலா? என்ற கேள்வியும் முஸ்லிம் உலகில் எழுந்ததுண்டு. இஸ்லாமிய அறிவு அறிவுதான். அதில் எவ்வித மாற்றமும் கிடையாது. அதன் அடிப்படைகள், தத்துவங்கள் யாவும் குறுகிய மனித அறிவிற்கு பொருத்தமற்றதாகக் காணப்பட்டாலும் அதை மனிதர்கள் ஏற்று நடப்பதே அவர்களின் இம்மை மறுமையின் வெற்றியின் இரகசியம் **தங்கியுள்ளது**

.

**கலாநிதி ஸயீத் ரமளான் புவைதி என்பவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.**

**இஸ்லாமிய மயமாக்கல் என்ற சிந்தனைக்கருவின் நோக்கம் மனங்களை - இஸ்லாமாக-மாற்றுதவதுான். அறிவை இஸ்லாமாக மாற்றுவது அல்ல. இஸ்லாமிய அறிவு மாற்றப்பட வேண்டியதும் அல்ல. ஏனெனில் அது எவ்வித கலப்பும் அற்ற ஒரு அம்சமாகத் திகழ்கின்றது.** (1)

**மனிதர்கள் இறை விதிகளுக்கு மாறாக தமது சொந்த அறிவினால் கண்டுபிடித்துள்ளவற்றின் மூலம் பல அழிவுகளை உலம் சந்தித்த பின்னரும் இவ்வாறான வாதங்கள் வரவேற்கப்பட முடியாததாகும். பொதுவாக மனிதர்கள் பயன்பெறும் எந்த அறிவினையும் இஸ்லாம் தடை செய்யவில்லை. ஆனால் மறுமையின் சிந்தனையைத் தூரமாக்கி, இறை கட்டளைகளை உதாசீனப்படுத்தும் எந்த விதான அறிவியில் முன்னேற்றத்தையும் இஸ்லாம் ஆதரிக்கவில்லை என்பதற்கு சென்ற சமூகங்களில் வரலாறு முக்கிய பாடமாகும்.**

-----------------------

1- http://www.alukah.net/Sharia/0/7442/#ixzz2SxfUhjiO

# "أسلمة المعرفة" அவசியத்தை உணர்ந்த இஸ்மாயீல் ஃபாரூகி அவர்கள்.

கலாநிதி ஃபாரூக்கி அவர்களால் முஸ்லிம் உலகின் நிலை பற்றிய ஆழமான பார்வை **ஆங்கிலக் கட்டுரையின் அரபு மொழியாக்கத்தில் இருந்து முக்கிய பகுதிகள்** இங்கு தமிழில் தரப்படுகின்றது.


**أ. د. إسماعيل راجي الفاروقي**

**مدير المعهد العالمي للفكر الإسلامي- فيلادلفيا**

**ترجمة: فؤاد حمودة و عبد الوارث سعيد**

**جامعة الكويت**



**مقال منشور في مجلة المسلم المعاصر ، العدد 32، 1982، ص. ص. 9-23**

**هذا المقال هو ملخص لبحث باللغة الانجليزية قدم إلى المؤتمر الدولي الأول عن "أسلمة المعرفة" في إسلام آباد ، باكستان ، ربيع الأول 1402هـ يناير 1982م . و أصل البحث باللغة الانجليزية عنوانه: ISLAMIZATION OF KNOWLEDGE**


## أولا : أعراض المشكلة

تقف الأمة الإسلامية اليوم في مؤخرة الأمم، فليس هناك أمة قد تعرّضت في هذا القرن لمثل ما تعرّضت له الأمة الإسلامية من هزائم أو من إذلال . لقد هُزم المسلمون وقتّلوا وسلبت منهم أوطانهم وثرواتهم ، بل وأرواحهم وآمالهم . لقد استُعمروا واستُغلوا وخُدعوا وحُوّلوا عن دينهم إلى أديان أخرى بالقوة أحياناً وبالرشوة وبالخدعة أحياناً أخرى . ولقد قام أعداؤهم مستعينين بعملائهم في الداخل والخارج ، بصرفهم عن إسلامهم كي يتحوّلوا إلى عَلمانيين أو إلى عبيد للغرب ، وكل هذا حدث فعلاً في كل دولة بل وكل ركن من أركان العالم الإسلامي ، ورغم أن المسلمين كانوا ضحايا الظلم والعدوان في كل ناحية إلا أنهم كانوا أيضاً عرضة لتشويه سمعتهم وتلويث سيرتهم أمام الأمم.

முஸ்லிம் உம்மாவின் உயிர்கள் வீணாக ஓட்டப்பட்டு, அவர்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டு, வளங்கள் சூறையாடப்பட்டு, அவர்களின் பிரதேசங்கள் துண்டாடப்பட்டு, அவர்களின் மார்க்கத்தில் இருந்து அவர்களை வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அவர்களின் எதிரிகளால் அவர்களுக்கு எதிராக மோசடி செய்யப்பட்டு, அவர்களின் விரோதிகளுடன் இணைந்து மதச்சார்பற்ற முஸ்லிம் புல்லுருவிகள், மேற்கின் அடிமைகள் அவர்களுக்கு துரோகம் இழைத்த பாரிய அழிவிலும் பின்னடைவிலும் அவர்களைத் தள்ளி இருந்தனர்.

إن صفحتهم هي أسود الصفحات في عالم اليوم . إن "المسلم" تصوّره وسائل الإعلام في أيامنا هذه دائماً وبشكل مستمر على أنه عدواني مخرّب ، مخادع ، مستغل ، قاس ، متوحش ، متمرد ،إرهاب ي، همجي ، متعصّب ، متحجّر الفكر ، متخلّف ، سقيم الرأي. إن المسلم محلّ الكراهية والاحتقار من قِبَل غير المسلمين على اختلاف ألوانهم سواء كانوا متنوّرين أو متخلّفين ، رأسماليين أو شيوعيين ، شرقيين أو غربيين ، متحضّرين أو متوحشين...

முஸ்லிம் என்றால் பயங்கரவாதி, அடிப்படைவாதி, சந்தர்ப்பவாதி, தீயவன், கொள்ளையன், கடும்போக்குவாதி, பிற்போக்குவாதி, கருத்தில் நோய் உள்ளவன், எதிரி, துரோகி என்றெல்லாம்

பத்திரிகைகள், வானொலிகள் போன்ற தொலைத் தெடார்பு சாதனங்கள் ஊடாக பொய்கள் பரப்பப்பட்டு முஸ்லிம்கள் உலகில் தீயவர்கள், இஸ்லாம் தீவிரவாத மார்க்கம் என்ற முத்திரை குத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு முஸ்லிம்கள் பக்கங்கள் கருப்பால் நிரப்பப்பட்டிருந்தது.

முஸ்லிம் உலகு என்பது உள்நாட்டுக்கலவரங்கள், உட்பூசல்களும் நிறைந்த பிரதேசங்களாகவும், சண்டைகளும் முரண்பாடுகளும் தொடரும் நாடுகளாகவும் பார்க்கப்பட்டது. அது உலக சமாதானத்திற்கு எதிரான ஒரு மதம் எனப் பிரச்சாரம் செய்ய எதிரிகளுக்கு வாய்ப்பளித்தது மட்டுமின்றி பசி, பட்டினிச்சாவு, கொடிய நோய்கள் நிரம்பிய பிரதேசங்களாகவும் பார்க்கப்பட்டது. சுருக்கமாகக் கூறுவதனால் முஸ்லிம் உலகு என்பது ஒரு மனநோயாளியாகவே பார்க்கப்பட்டது. மட்டுமின்றி, முஸ்லிம் உலகுதான் உலகின் முழுத்தீமைக்குமான இறக்குமதி நாடுகள் என்ற கண்ணோட்டம் மக்கள் மனதில் விதைக்கப்பட்டது.

இத்தனைக்கும் ஆயிரம் மில்லியன் மக்கள் தொகையையும் தாண்டி, விசாலமான நிலப்பரப்பின், உலக வளங்களின் பெரும் பகுதியின் சொந்தக்காரர்களாக முஸ்லிம்கள் இருப்பதும், இஸ்லாம் பூரணமான, சத்திய மார்க்கம் என்பதும் மனித சிந்தனைகளில் இருந்து சிதைக்கப்பட்டது.

சந்தேகத்திற்கு இடமின்றி இந்த நோயின் அடிப்படையாளர்கள் முஸ்லிம்களே! முஸ்லிம் சமூகத்தில் உள்ளிருந்தே அதற்கான நிவாரணி கண்டறியப்பட வேண்டும். அதனால் முஸ்லிமை சீரமைப்பதற்குத் மேற்கொள்ளப்படும் அனைத்துவிதமான நடவடிக்கைகளும் அது அவனது வெளிப்படையான சீர் திருத்தமாகும். இது ஒரு பிரச்சினையின் மூலத்தைச் சென்றடைய நாளாகும். முஸ்லிம் படைத்தளபதிகள், வீரர்கள் என்போரிலும் இந்நோய் பாரியளவு தொற்றி இருக்கின்றது. எனக்குறிப்பிட்ட பின்னர்,

فإن الإصلاح الحقيقي ينبغي أن يكون إصلاحاً جذرياً وشاملاً... يجَلّي حقيقة الإسلام للجميع ويثير فيهم إرادة التغيير... إن الهدى هو في الأصل من الله ولكن على الإنسان أن يقوم بدوره ثم يَكِل الباقي إلى الله تعالى ، فنحن نعلم أن نصر الله يمنح لأولئك الذين ينصرون الله... ) وَلَيَنصُرَنَّ اللَّهُ مَن يَنصُرُهُ( (22: 40) ... ) إِن تَنصُرُوا اللَّهَ يَنصُرْكُمْ وَيُثَبِّتْ أَقْدَامَكُمْ ( (47: 7).

உண்மையான, யதார்த்தபூர்வமான சீரமைப்பு என்பது அதன் அடிவேரில் இருந்துதான் தொடங்க வேண்டும். ஆழ்மனங்களில் அந்த சீர்திருத்தம் ஊடுவிப்பாய வேண்டும். அது இஸ்லாத்தின் யதார்த்தத்தை உணர்த்தி மாற்றத்தை உலகுக்கு அறிவிக்க வேண்டும். அடிப்படையான நேர்வழி என்பது அல்லாஹ்விடம் இருந்து பெறப்பட்டதாகும். மனிதன் அதற்கு பங்களிப்புச் செய்து அல்லாஹ்விடம் பாரம் சாட்ட வேண்டும். நாம் அனைவரும் அல்லாஹ்வுக்கு உதவினால் நமக்கு அவன் உதவுவான் என்பதை நாம் அறிவோம். நிச்சயமாக அல்லாஹ்வுக்கு உதவுபவர்களுக்கு அல்லாஹ்வும் உதவுகின்றான். (அத்:22 வச:40), நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவி செய்தால் அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வான். (அத்: 7-47)

இங்குதான் தர்பியாவின் தூய்மையான பணி மறைந்திருக்கின்றது. அதன்மூலமாகமாத்திரமே முஸ்லிம் உம்மாவை யதார்த்தமாகப்பாதுகாக்க முடியும். அதாவது இந்த சமூகத்தை இஸ்லாமிய அடிப்படையில் புதிதாக மீண்டும் கட்டி எழுப்புவதாகும். அதைத் தவிர வேறு ஒரு தெரிவு இந்த சமூகத்திற்கு இருக்க முடியாது. இதுதான் பிரஸ்தாபிக்கப்பட்ட சாத்தியமான நடைமுறையாகும். இதுவே நஷ்டங்கள் இல்லாத, வகைதொகையான செலவுகள் இல்லாத வழிமுறையாகும்.

## *மதச்சார்பின்மைக்கும் இஸ்லாமியமயப்படுத்தலுக்குமான தொடர்பு பற்றி ஃபாருக்கி அவர்கள்:*

தர்பியமயமாக்கல் பற்றி கருத்து தெரிவிக்கின்ற போது " முஸ்லிம் கல்வி நிருவனங்கள் வரலாறு காணாத பலவீனத்தில் காணப்படுகின்ற அதேவேளை, மதச்சார்பற்ற பிரச்சாரகர்களின் பல்கலைக்கழுங்களும், கல்லூரிகளும் அதன் விம்பத்தை தொட்டுவிட்டது. மதம் தேவையற்றது என்ற கோஷம் முஸ்லிம் இளைஞர்களின் மனங்களில் ஆழப்பதிந்து அவர்களின் அடிப்படைகள் சிதைக்கப்பட்டுள்ளது. அவர்கள் குழப்பத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். காலணித்துவ சக்திகளின் பின்னணியில்தான் இந்த மதச்சார்பற்ற சிந்தனையாளர்கள் வளர்கின்றார்கள். அது அதன் இடத்தைப்பிடித்து இஸ்லாமிய ஒழுங்கமைப்பை முற்றத்தில் இருந்து தூரமாக்கிவிட்டது. தனிமனித முயற்சியில்தான் பொதுவாக இஸ்லாமிய தர்பியா தங்கி நிற்கின்றது. அதனால் பொது வருவாய்ப் பணங்களைத் திரட்டும் வழிகள் அதற்கு அசியம் இல்லை. ***தொடர்ந்தும் அவர் கருத்துக் கூறுகின்றபோது "*** மதச்சார்பற்ற சிந்தனைக் கோஷம் தனது பிரச்சாரம் புதுமையானது, சீரமைப்பு சார்ந்தது, சமூகத்திற்கு உகந்தது, அறிவுடையானது என்றெல்லாம் பீற்றிக் கொள்கின்றது. இது சமூகத்தை இருகிளைகளாக்கி விடும். ஒன்று மரபு வாத சிந்தனையை அடியொட்டிய அல்அஸ்ஹர் பல்கலைக்கழகக்கிளை. மற்றொன்று புதிய சிந்தனைக் கிளை. இஸ்லாமிய சிந்தனைக்கிளை தனது போக்கில் எவ்வித மாற்றத்தையும் கொண்டுவராமல் அடம்பிடித்துக் கொண்டிருக்கின்றது. மற்றொரு பகுதியில் மதச்சார்பற்ற சிந்தனையாளர்கள் முஸ்லிம் சமூகத்தை சீரமைக்கும் பணி நுழைந்துவிடாமல் இஸ்லாமியப் பல்கலைக்கழ மாணவர்கள் தமது இடத்தைப்பிடித்துக் கொள்வதில் இருந்து விழிப்புடன் செயல்படுகின்றனர். இதற்கான நேர்த்தியான திட்டமானது காலணித்துவாதிகளால் வரைந்து தரப்பட்டிருக்கின்றது. மதச்சார்பற்ற சிந்தனைக் கும்பல் பெரும்பாலும் நாடுகள் விடுதலை பெற்றதோடு நாட்டில் வந்து ஒட்டிக் கொண்டது. அதற்குப் பெருந்தொகையான பணம் செலவழிக்கப்பட்டது. அதனால் அது தனது மதச்சார்பற்ற சிந்தனைக்கு மேல் மற்றொரு சிந்தனையான தேசியவாத சிந்தனையைச் சுமந்து செயலாற்றியது. இதனால் இஸ்லாம் ஒரு ஆசிரியர், மாணவர்களிடம் இருந்து தூரமாக்கப்பட்டது. இவை அனைத்தும் கல்விக் கல்லூரிகளில் பாடபோதனைகளிலும் இணைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அதை யாரும் எதிர்த்துப் போராட முன்வரவில்லை.

தற்போது நிலைமை காலணித்துவ காலப்பகுதியை விடப்பரிதாபகரமானது. அந்தக்காலப்பகுதியில் காலணித்துவத்தை எதிர்த்துப் போரிடுதல், சுதந்திர வேட்கை என்ற பெயரில் பெரும்பான்மை முஸ்லிம்கள் பல தியாகங்கள் செய்தனர். இப்போது அது பரிகாசமாக நோக்கப்படுகின்றது. பெரும்பான்மை சிறுபான்மை வாதம் புரியப்படுகின்றது. படைத்தரப்புக்களில் நம்பிக்கை ஈனம் காணப்படுகின்றது. இதற்கெல்லாம் அடிப்படைக்காரணி எந்த ஒரு துறையை நம்பி எதையும் செய்ய முடியாமையாகும்.

**والنتيجة لذلك كله ضياع الإتقان في كل حقل وفي كل مجال حتى أصبحت سفينة الأمة الإسلامية تغوص في كل يوم أبعد من سابقه...**

இதன் இறுதி முடிவு என்னவென்றால் அனைத்து துறைகளிலும், அனைத்து களங்களிலும்

நம்பிக்கை பாழடிக்கப்பட்டுள்ளது. அதனால் இஸ்லாமிய உம்மத்தின் கப்பலானது ஒவ்வொரு நாளும் முந்திய நாளை விடத் தொலைவில் மூழ்கிய வண்ணம் இருக்கின்றது.

இஸ்லாமிய அரசுகள் அதன் நிருவாக முறைகள் பற்றிப் பேசுகின்ற போது

ஒரு முஸ்லிம் அரசு கிடையாது. ஒழுங்கான நிர்வாகம் கிடையாது, சரிந்து கிடக்கின்ற இந்த சமூகத்தின் ஆன்மீக பலவீனத்தை சரிப்படுத்தும், பாதுகாக்கும் ஒரு கூட்டமைப்பு இல்லை. மேற்கில் மாணவர்கள் படிப்பதற்கென்று தயார் செய்து கொடுக்கப்படும் பாரிய நிகழ்ச்சி நிரல்கள், வசதி வாய்ப்புக்கள் அனைத்தும் மதச்சார்பற்ற சிந்தனையாளர்களுக்கு வாய்ப்பாகிவிடுகின்றது. இந்த நேரத்திலும் முஸ்லிம் சமூகத்தை புணர் அமைக்கின்ற நடவடிக்கை எதுவும் செய்யப்படவில்லை. யாரும் இஸ்லாமிய சிந்தனை பற்றி அலட்டிக் கொள்வதும் இல்லை. இதனால் மேற்கின் பாடத்திட்டத்தால் கவரப்பட்டு அதன் பக்கம் விரைந்தோடும் நிலை முஸ்லிம் மாணவர்களிடம் காணப்பட்டது. கட்டடங்கள், காரியாலயங்கள், வாசிகசாலைகள், பல விரிவுரையாளர்களையும், மாணவர்களையும் உள்ளடக்கிக் கொள்கின்ற மேற்கில் உயர் நிலையில் காணப்பட நம்மிடம் சாதாரண சடப்பொருள்களாகக் காணப்படுகின்றன.

அதன் காரணமாக முஸ்லிம்கள் இரண்டு நூற்றாண்டுகள் மேற்கத்திய பாடப்போதனையில் வளர்க்கப்பட்டார்கள். மேற்கில் மேற்கொள்ளப்படுவது போன்ற எவ்வித கண்டு பிடிப்புக்களை அவர்களால் முன்வைக்க முடியவில்லை. கல்லூரிகள் இல்லை, பல்கலைக்கழங்கள் இல்லை. சிறப்பித்துக் கூற முடியுமான அறிஞர்கள் இல்லை. இதுவே இஸ்லாமிய உலகைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாமைக்கான முக்கிய காரணியாகும்.

## அறிவை இஸ்லாமிய மயமாக்கல்

இஸ்லாமிய சிந்தனை அற்ற ஆசிரியர்கள் பாடம் கற்பிப்பதானது இஸ்லாமிய தர்பியாவில் ஏற்படும் மிகப்பெரிய சாபக் கேடாகும். சரியான சூழல் அற்ற நிலையில் வளர்க்கப்படுகின்ற மாணவனிடம் அங்கொன்றும் இங்கொன்றுமான உணர்வுகள் காணப்படும். காலப் போக்கில் அது கரைந்து விடும். அதனால் அதை சரியாக நிறைவேற்றும் பணி அவசியமாகின்றது.

இதனால் இஸ்லாத்தைச் சீராகக் கற்றவர்களிடம் மாணவர்கள் ஒப்படைக்கப்பட்டு கல்வி இஸ்லாமிமயப்படுத்தல் அவசியமாகும். அப்போதுதான் இஸ்லாத்தின் அடிப்படை நோக்கத்தை அது நிறைவு செய்யும். அதனால் யதார்த்தம் ஒன்றாகவும், மனித அறிவு ஒன்றாகவும், வாழ்வு ஒன்றாகவும், நம்பிக்கை ஒன்றாகவும் காணப்படும். இந்த அண்டம் படைக்கப்பட்டதன் பின்னணி புரிய வரும். அல்லாஹ்வுக்கு மனித அடிமையாக இருப்பதன் அவசியம் தெளிவாகும். மேற்கின் வழியில் அன்றி இஸ்லாமிய வழியில் அறிவின் யதார்த்தம் உணர்த்தப்பட்டு இஸ்லாமிய தலைமைத்துவத்திற்கு அறிவு பயன்படுத்தப்பட வேண்டும். படைப்பினங்கள், படைப்பாளன் இடையில் உறவுகள் பற்றி பரிசீலிக்கப்பட வேண்டும். இஸ்லாமியப் பாரம்பரியம், கலை, கலாசாரம், கல்வி என்பன மேற்கின் வழி நின்று இஸ்லாமிய அடிப்படையில் கட்டி எழுப்பப்

படவேண்டும். இதுவே நோக்கங்களில் மிக உயர்ந்ததும், உண்ணதமானதுமாகும் எனக்குறிப்பிட்ட பின்னர்,

..وهو أسمى تحقيق لإرادة الله وهو أساس كل فضيلة அதுவே அல்லாஹ்வின் நாட்டத்தை உறுதிப்படுத்துவதில் உயர்ந்ததாகும். அதுதான் அனைத்து சிறப்புக்களினதும் அடிப்படையுமாகும் எனவர்ணிக்கின்றார். சம உடமைப் பொருளாதாரம், சோசிஸம், கம்யூனிஸம் போன்ற உலகக் கொள்கைள் ஒருவரை அந்த சிந்தனைக்கு மக்களைத் தன்பக்கம் கவர்ந்திழுப்பதைப் போன்று முஸ்லிம்களும் இந்த நிலைப்பாட்டில் கவரப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

இருந்தாலும் இஸ்லாம் அவற்றுடன் ஒன்றிணைந்து செல்கின்ற ஒரு கொள்கை கோட்பாடு அல்ல. அது அதன் தனித்துவத்தை விட்டுக் கொடுப்பதில்லை. அதற்குள் கரைந்துவிடுவதும் இல்லை. மாற்றமாக அது மனிதனால் பின்பற்றப்பட வேண்டிய கோட்பாடு என்று வட்புறுத்திக் கூறுகின்றது. நாம் முன்வைக்கின்ற இந்த சிந்தனையை நடைமுறைப்படுத்தும் ஒரு நிறுவனம் முஸ்லிம் உலகில் இல்லை என்பது கவலை அளிக்கின்றது. அதனால் அதற்கு தேவையான பாடநூல்கள் வெளியிடப்படுவது அவசியமாகும். சர்வதேச அளவில் அது பற்றிய ஆய்வை மேற்கொள்கின்ற ஆய்வு மையம் ஒன்றும் இன்றி அமையாததாகும். அப்போதுதான் அதை சாத்தியப்படுத்தி நடைமுறைப்படுத்திட முடியும். (1)

இஸ்லாஹ், தஜ்தீத் என்பதை ஆராய்கின்ற போது அவற்றிற்கும் இஸ்லாமியமயப்படுத்தலுக்கும் இடையில் பாரிய சொல், மற்றும் கருத்தொற்றுமை காணப்படுவதைக் காணமுடிகின்றது. அதனால் தஜ்தீதின் வரைவிலக்கணம், முஜத்தித் என்போரது தகுதி, தஜ்தீத் எவ்வாறு எதில் கொண்டுவப்படலாம் என்ற சுருக்கமான பார்வையும் பின்வரும் அத்தியாயங்களில் தரப்பட்டுள்ளது.

**குறிப்பு: இவை ∴பாருக்கியின் கருத்துக்களின் அரபு, ஆங்கில மொழி பெயர்ப்பின் தமிழ் மொழிமாற்றமாகும்.**

---------------

*1- **www.ibrahimragab.com/ismail-18***

## இஸ்லாஹ் - தஜ்தீத் இஸ்லாமிய மயமாக்கல் ஆகியவைகளுக்கிடையிலான தொடர்பு பற்றிய அம்சங்கள்.

இஸ்லாஹ் சீரமைப்பு, புணருத்தானம் என்பது தஜ்தீத்- புதிப்பித்தல், புதிய சிந்தனையை முன்வைத்தல் என்பதோடு உடன்படுவதையும், அது இஜ்திஹாதுடன் நெருங்கிய உறவில் காணப்படுவதையும் அவை பற்றிய கண்ணோட்டத்தை ஆராயும் போது அறிய முடிகின்றது.

முஜத்தித், முஸ்லிஹ் என்போரின் பணியின் மீது இவை தங்கி நிற்பதும் இதன் காரணங்களில் ஒன்றாகும். அதனால் தஜ்தீத் என்பதால் நாடப்படும் கருத்தும் அது தொடர்பான அம்சங்களும் வரும் தொடரில் பேசப்படுகின்றது.

பொதுவாக தஜ்தீத் என்பதை இவ்வாறு நோக்குகின்றனர்.

إعادة الدين بنصوصه وقواعده ومناهج الفهم والاستنباط فيه، إلى حالته الألى التي أنزله الله عليها ، وإزالة كل ما تراكم عليه من سمات ومظاهر ، طمست جوهره ، وشوهت حقيقته . (1)

**மார்க்கத்தை அதன் சான்றாதாரங்கள், சட்டவிதிகள், விளக்கங்களின் வழிகள், சட்டங்களை அகழ்ந்தெடுக்கும் முறைகள் மூலம் அல்லாஹ் இறக்கிவைத்த அதன் ஆரம்ப நிலைக்கு கொண்டு செல்வதோடு, அதன் மேல் படிந்துள்ள வெளிப்படையான அடையாளங்களை அகற்றி, அதன் உட்பெறுமாணத்தை அழித்து, அதன் யதார்த்தத்தை சீர்குலைத்துள்ள அனைத்தையும் இல்லாதொழிப்பதாகும். (1)**

---------------------------------------

(1) من مقدمة كتاب " التجديد في الإسلام لعدنان محمد أمامة

# தஜ்தீதின் வரைவிலக்கணம்

தஜ்தீத் என்பதை ஒன்றை புதுப்பிப்பதைப் பொதுவாகக் குறிக்கும். மார்க்கத்தில் வழக்கொழிந்ததை மீண்டும் சமுதாய சிந்தனைக்கு கொண்டுவருவதை ஷரீஆவின் அடிப்படையில் தஜ்தீத் எனக் கொள்ளப்படும். அது மூன்று முக்கிய கருப்பொருளில் ஆளப்படுகின்றது.

المحور الأول : إحياء ما انطمس، واندرس من معالم السنن ونشرها بين الناس، وحمل الناس على العمل بها (1)

1- மார்க்கத்தில் தூர்ந்து போயுள்ளதையும், சுன்னாவில் இல்லாதொழிந்து போயுள்ளதையும் உயிர்ப்பித்து மக்கள் மத்தியில் அதைப் பரப்புதல், மக்களை அதன்படி செயல்படத்தூண்டுதல். (1)

المحور الثاني : قمع البدع والمحدثات، وتعرية أهلها وإعلان الحرب عليهم، وتنقية الإسلام مما علق عليه من أوضار الجاهلية ، والعودة به إلى ما كان عليه زمن الرسول صلى الله عليه وسلم وصحابته الكرام:

2- மார்க்கத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட சித்தாந்தங்களைத் தகர்த்து, அதில் ஈடுபடுவோரை அதில் இருந்து முழுமையாக விலக்கி, அவர்களுக்கு எதிராகச் செய்யப்படும் போர்ப்பிரகடனம். அத்துடன், ஜாஹிலிய்யா சிந்தனைகள் இருந்து அதன் மீது தொக்கி நிற்கும் அம்சத்தை துப்பரவு செய்து, இறைத்தூதரும், அவர்களின் கண்ணியமிக்க தோழர்களும் சென்ற வழிக்கு மீளுதல்.

المحور الثالث : تنزيل الأحكام الشرعية على ما يجدّ من وقائع وأحداث، ومعالجتها معالجة نابعة من هدى الوحي : (1)

3- மூன்றாவது அம்சம் : புதிதாக ஏற்படுகின்ற மார்க்கப் பிரச்சினைகள், நிகழ்வுகளுக்கு ஷரீஆவின் சட்டத்தைப் பிரயோகித்து, வஹியின் அடிப்படையில் அதற்குரிய பரிகாரத்தைப் பெற்றுக் கொள்வதாகும். இம்மூன்று முக்கிய விதிகளும் தஜ்தீதின் போது பேணப்படல் வேண்டும். (1)

------------------------------------

(1) من كتاب " التجديد في الإسلام لعدنان محمد أمامة –ص– 16 –20

# அறிஞர்களின் பார்வையில் தஜ்தீத்

## இப்னுல் அல்கமி அவர்களின் கருத்து:

1- அழைத்தல். இப்னுல் அல்கமி (ரஹ்) அவர்களின் பார்வையில்:

معنى التجديد : إحياء ما اندرس من العمل من اكتاب والسنة والأمر بمقتضاهما.

அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவில் இருந்து மறைந்து போயுள்ள செயல்களை உயிர்ப்பித்து, அவ்விரண்டிற்கும் அமைவாக செயல்படுவதாகும் (1)

## மௌதூதி (ரஹ்) அவர்களின் கருத்து:

التجديد في حقيقته : هو تنقية الإسلام من كل جزء من أجزاء الجاهلية ، ثم العمل على إحيائه خالصا محضا على قدر الإمكان.

ஜாஹிலிய்யாவின் ஒவ்வொரு கூறுகளில் இருந்தும் இஸ்லாத்தை தூய்மைப்படுத்தி, அதை உயிர்பித்து தெளிவாகவும், கலப்படமற்றதாகவும் முடியுமான அளவு அதனை அமுல் நடத்துதல். (1)

## அப்துர்ரஊ.ஃ.ப் அல்மனாவி அவர்களின் கருத்து:

பித்ஆவில் இருந்து சுன்னாவைத் தெளிவுபடுத்தலும், அறிவைப்பரப்புவதும், அது சார்ந்தோருக்கு உதவுவதும், பித்ஆ சார்புடையவர்களை நொறுக்கி கேவலுப்படுத்துவதுமாகும்.

يجدد لها دينها : أي يبين السنة من البدعة، ويكثر العلم، وينصر أهله، ويكسر أهل البدعة ويذلهم.

அவ்வாறு நோக்குின்ற போது: இந்த அறிஞர்களின் கருத்துக்களை ஒத்ததாக அதாவது சுன்னாவை நிலை நிறுத்தி, பித்ஆவைப் புதைத்தல், அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவின் ஆரம்ப நிலைக்குத் திரும்புதல் என்ற கருத்தில் பொதுவாக பல அறிஞர்கள் உடன்படுகின்றனர் என்ற உண்மை புலனாகின்றது. (1)

-----------------------------

(1) من كتاب " التجديد في الإسلام لعدنان محمد أمامة –ص– 16

**அல்அளீம் ஆபாதி அவர்களின் கருத்து:**

التجديد: إحياء ما اندرس من العمل بالكتاب والسنة، والأمر بمقتضاهما، وإماتة ما ظهر من البدع والمحدثات.

**அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவில் இருந்து மறைந்து போயுள்ளதை உயிர்ப்பித்தலும், அவ்விரண்டிற்கும் அமைவாக அமுல் செய்வதும், மார்க்கத்தின் பெயரால் வெளிவந்துள்ள பித்அத்கள், புதியவைகள் அனைத்தையும் புதைப்பதுமாகும் (1) சுனன் அபீதாவூதின் விரிவுரையிலும் இக்கருத்து பதிவு செய்யப்பட்டுள்ளது.**

முஜத்தித் என்பவர் பணி பற்றி விபரித்த மௌதூதி (ரஹ்) அவர்கள்:

**المجدد** : كل من أحيا معالم الدين بعد طموسها ، وجدد حبله بعد انتقاضه. (1)

இவர்களின் பார்வையில்: முஜத்தித் என்பவர்: மார்க்கத்தின் சுடர்களின் அணைந்த பின், அதன் கயிறு இத்துப்போய் அறுந்த பின் மீண்டும் அதன் அடையாளங்களை ஒளிர் ஊட்டி உயிர்ப்பிக்கும் ஒவ்வொருவரும் முஜ்தஹிதாகக் கொள்ளப்படுவார் என விளக்கம் தருகின்றார்கள் (1)

அதேவேளை அல்லாமா யூசு.ஃ.ப் அல்கர்ளாவி அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்:

إن التجديد لشيء ما : هو محاولة العودة به إلى ما كان عليه يوم نشأ وظهر ، بحيث يبدو مع قدمه كأنه جديد، وذلك بتقوية ما وهى منه، وترميم ما بلي، ورتق ما انفتق، حتى يعود أقرب ما يكون إلى صورته الأولى.

فالتجديد ليس معناه تغيير طبيعة القديم، أو الاستعاضة عنه بشيء آخر مستحدث مبتكر، فهذا ليس من التجديد في شيء...

ثم يقول : ولا يعني تجديده إظهار طبعة جديدة منه، بل يعني العودة به إلى حيث كان في عهد الرسول صلى الله عليه وسلم وصحابته ومن تبعهم بإحسان. (1)

*பொதுவாக தஜ்தீத் என்பது ஆரம்ப நிலையில் தோற்றம் பெற்று உருவான ஒரு நிலைக்குத் திரும்பும் முயற்சியாதான். அதாவது பழையதுடன் ஒப்பிடும் பொழுது அது புதியது என்பது தெரியவரும். அதாவது அதில் பலவீனப்பட்டடதை பலப்படுத்தி, மக்கிப்போனதை புணருத்தாணம் செய்து, இத்துப்போனதை ஒட்டுவதாகும். அதன் ஆரம்பத் தோற்ற நிலைக்கு அது மீளும் வரையில் இது பேணப்படும்.*

***தஜ்தீத் என்பது ஒன்றை இல்லாதொழித்து புதிய ஒன்றை தோற்றுவிப்பது அல்ல. அது தஜ்தீதும் அல்ல...... புதியதைத் தோற்றுவிப்பது என்பது புதிதாக ஒன்றை உருவாக்குவது என்பதல்ல. மாற்றமாக இறைத்தூதரின் காலத்தில், அவர்களின் ஸஹாபாக்கள் காலத்தில்,***

*அவர்களை நல்லபடியாக பின்பற்றிவந்தோர் காலத்தில் இருந்த நிலைக்கு மீளுதலாகும். (1)*

*தஜ்தீத் என்றால் பெயரால் மார்க்கத்தில் இல்லாதவற்றை மார்க்கமாக்குவதுச் சாடும் அறிஞர் கஸ்ஸாலி அவர்கள் அவ்வாறான நடவடிக்கைகள் எச்சரிக்கப்பட வேண்டியது என்றும், இஸ்லாத்தில் இவ்வாறு இவ்வாறான அம்சங்கள் முழுமைப்படுத்தப்படாது விடப்பட்டுள்ளது எனவாதிடுவது இஸ்லாத்தில் இருந்தும் வெளியேறும் செயலாகும் என்றும் எச்சரித்துள்ளார்கள். (1)*

.

------------------------

1- المصدر السابق – ص- 20

# தஜ்தீத் ஏன் அவசியப்படுகின்றது?

**இந்தக் கேள்வி இயல்பானதுதான். மார்க்கம் நிரந்தரமானது. நிகழ்வுகள் புதுவடிவம் பெறக் கூடியது என்பதைக் காரணம் காட்டி பின்வரும் காரணிகள் தஜ்தீதின் அவசியத்தை உணர்த்துகின்றன**

1- ***الخلود மார்க்கத்தின் நிரந்தரத்தன்மை.***

இது முஹம்மத் நபியின் மார்க்கத்திற்கான உத்தரவாதமாகும். நான் இன்றைய தினம் உங்கள் மார்க்கத்தை உங்களுக்குப் பூரணப்படுத்திவிட்டேன். எனது அருட்கொடைகளை உங்கள் மீது சம்பூரணப்படுத்திவிட்டேன். இஸ்லாத்தை உங்களுக்கு மார்க்கமாகவும் பொருந்திக் கொண்டேன். **(1)** " நான் இறுதி நபியாகும் எனக்குப் பின்னால் நபிமார்கள் இல்லை. **(2)** என்ற உறுதியான கோட்பாட்டின் மூலம் இது உறுதி செய்யப்படுகின்றது.

*இஸ்லாம் இறுதிவரை உயிர்வாழும் என்று உறுதியாகக் கூறும் மார்க்கம் என்பதால் அவ்வப்போது மனிதர்களுக்கு நிகழும் புதிய நிகிழ்ச்சிகளுக்குரிய தீர்வையும் அது தன்னகத்தே தாங்கி நிற்கின்றது என்பது இஸ்லாமிய அறிஞர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.*

***இங்கு தஜ்தீத்*** என்பது இரு பிரதான காரணங்களின் அடிப்படையில் அவசியம் எனக் உணர்த்தப்படுகின்றது.

முதலாவது காரணி: ***மார்க்கத்தின் சான்றாதாரங்கள் என்பன மட்டிடப்பட்டவைகளாகும். ஆனால் நிகழ்வுகள் வேறுபட்டவைகளாகும்.*** இந்தக்காரணத்தை முன்வைத்து **இஜ்திஹாதின்** வாயில் திறப்பது அவசியமாகும். இது பற்றிய கருத்தை இமாம் ஷாதிபி *போன்றோர் வலியுறுத்தி உள்ளனர்.* (3)

------------------

1- அத்: அல்மாயிதா: வச: 03

2- புகாரி, முஸ்லிம். இறுதி நபித்துவம் பற்றி அத்தியாயம்.

3- نقلا من كتاب " التجديد في الإسلام ص– 20–22

**இரண்டாம் காரணி:** காலம் பிந்தி இருப்பதும், மக்கள் வஹியின் மூலாதார காலத்தை விட்டும் தூரவாகி இருப்பதும் மார்க்கத்தில் பிரள்வுகள் விசாலமாகி பித்ஆக்கள், வழிகேடுகள் பரவி இருப்பதும் முஜத்தித்களின் வருகையின் அவசியத் தேவையை உணர்த்தி நிற்கின்றது. (1)

2- ***الشمولية. அனைத்து விவகாரங்களுக்கும் தீர்வை உள்ளடக்கிய தன்மை***

சாதாரண மல சல ஒழுங்குகள் கூட இஸ்லாத்தில் கற்றுத்தரப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்ற அறிஞர்கள் அதில் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வு கூறப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றனர். **(1)**

## *தஜ்தீத் தொடர்புபட முடியாத அம்சங்கள்.*

**சில அம்சங்களில்** தஜ்தீத் **வரமுடியாது. அவை خاصية الثبات மாறாத்தன்மை கொண்டது. கால நேர சூழல்களுக்கு அமைவாக அவற்றை மாற்றியமைக்க முடியாது.**

✔ **அகீதா- இஸ்லாமிய நம்பிக்கை கோட்பாடு, இறைவிசுவாசத்தின் யதார்த்தங்கள், மறைவான செய்திகள் உள்ளடக்கி விடயங்கள் மிகப்பிரதானமானவையாகும்.**

✔ **மார்க்கத்தின் அடிப்படை சட்டங்கள் சார்ந்தவைகள், பொதுப்படை சார்ந்தவைகள். அவற்றை الضروريات الخمس ஐந்து அவசியமான அடிப்படைகள் எனக் கூறப்படும்.** இவை முழு மனித இனத்தின் நலன்களையும் உள்ளடக்கியவையாகும். இவற்றிலும் விட்டுக் கொடுப்பிற்கு இடமில்லை.

✔ **பொதுப்பண்பாடுகள், ஒழுக்கவிழுமியங்கள் சார்ந்தவைகள்,** இவற்றில் மனிதர்கள் விரும்பியவாறு மாற்றம் செய்ய முடியாது. அது ஏக இறைவனால் மனித நன்மை கருதி வழங்கப்பட்டுள்ளது.

✔ **வணக்கவழிபாடுகள் சார்ந்தவை.** ஒரு சமயத்தைப் பின்பற்றுவோர் தமது சுயமான விருப்பின் பேரில் செய்கின்றவற்றை தடுக்கும் உரிமை யாருக்கும் இல்லை. அதைவிட இஸ்லாமிய நெறி இறை நெறி என்பதால் அதன் வணக்க முறைகளில் முஸ்லிம்களோ அவர்கள் அல்லாதவர்களோ எவ்வித மாற்றத்தையும் தோற்றுவிக்கக் கூடாது.

✔ **குற்றவியல் தொடர்பான சட்டங்கள்.** இது அனைவரையும் படைத்த அல்லாஹ் மனித நலன்களையும் உயிர், பொருள்களுக்கான உத்தரவாதத்தையும் வழங்கியுள்ள சட்டங்களாகும். எனவே அவற்றில் எவ்வித மாற்றமும் கொண்டு வரமுடியாது.

✔ **நிர்ணயம் செய்யப்பட்டு வந்துள்ள அளவீடுகள். அவற்றிலும் எவ்வித மாற்றத்தையும் கொண்டுவரமுடியாது. உதாரணமாக ஸகாத், ஹஜ்ஜின் காலம், நோன்புமாதம் போன்றவை.**

✔ **அல்குர்ஆனிலும், சுன்னாவிலும் தெளிவாக வந்துள்ள அனைத்துவிதமான சட்டங்கள்.** **இவற்றில் மனிதர்கள் தமது சுய விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் எதையும் செய்யக் கூடாது.** (1)

சில அம்சங்களில் தஜ்தீத் நிகழலாம். அவை **خاصية المرونة மாறும் தன்மை கொண்டது. நெகழும் நிலையில் காணப்படும். அது கால நேர சூழல்களுக்கு அமைவாக அவற்றை மாற்றியமைக்க மார்க்கத்தின் அறிஞர்களால் முடிவு செய்யப்படும்.** (1) உதாரணமாக மக்காவில் நடை பெறும் விஸ்தரிப்பு நடவடிக்கையை குறிப்பிட முடியும்.

**இந்த அடிப்படையில் பார்க்கின்ற போது தஜ்தீத் என்பது பின்வரும் இஸ்லாமிய கற்கைள் கலைகளில் வரமுடியும் எனக் கருத்துக் கூறப்படுகின்றது. அதனை இவ்வாறு வரையறை செய்கின்றனர்.**

- **التجديد في علم العقيدة ،**
- **التجديد في علم أصول الفقه ،**
- **التجديد في علم الفقه ،**
- **التجديد في علم السنة النبوية،**
- **التجديد في علم التفسير ،**
- **التجديد في علم التزكية، والسلوك،**
- **التجديد في علم السيرة النبوية والتاريخ الإسلامي**

**இவற்றின் அடிப்படைகளில் மாற்றம் செய்வது அல்ல. மாற்றமாக, அவற்றின் வழிமுறைகளில் மாற்றம் செய்வதாகும்.** (2)

---------------------

**1- 27 -23- نقلا من كتاب " التجديد في الإسلام ص**

**2- அ. நூ: பக்கம்: 115- 237.**

# முடிவுரை

அவன்தான் அவனது தூதரை சத்திய மார்க்கத்தைக் கொண்டு அனுப்பினான். அதை பிற மதங்களை விட மேலோங்கச் செய்வதற்காக என்ற இறை மறை வசத்தின் மூலம் இஸ்லாத்தின் வழிகாட்டல் அனைத்து மதங்களின் வழிகாட்டல்களை விடவும் உயர்ந்தது என்பதை அல்லாஹ் அறிவிக்கின்றான்.

இஸ்லாமிய நெறிமுறைகள் எதுவானால் அது அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கு அமைவாக இருப்பதனால் இன்று அது பற்றி விமர்சிக்கின்ற நிலை இருப்பினும் காலப்போக்கில் அதன் யதார்த்தம் பற்றி மக்கள் புரிந்து கொள்வதை உலக நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இஸ்லாத்தின் அடிப்படைகளை விட்டுக் கொடுத்து மாற்றுக்கோட்பாடுகளுக்குள் கரைந்து விடுவதை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. மாற்றமாக அதற்கு முரண்பாடற்ற வகையில் மாற்றுக் கருத்தில் உள்ள மக்களின் நடைமுறைகளைப் பரிசீலித்து இஸ்லாத்திற்கு நன்மை தருமானால் அதை எடுத்துக் கொள்வதை இஸ்லாம் தடுக்கவும் இல்லை.

அந்த அம்சங்களில் ஒன்றாகத்தான் அறிவை, கல்வியை இஸ்லாமியமயமாக்கல் என்ற கோட்பாடும் நோக்கப்படுகின்றது. அது பற்றிய சுருக்கமான பார்வையை என்னால் முடியுமான அளவு அரபு நூல்களில் இருந்தும், இணைய தளங்களில் இருந்தும் தொகுத்தளித்துள்ளேன். அல்லாஹ் அதில் நன்மையை நாடவும் பிரார்த்திக்கின்றேன்.

***இறுதியாக எனக்கு அறிவையும் பண்பாட்டையும் புகட்டிய என் பெற்றோருக்கும் எனது விரிவுரையாளர்களுக்கும் அல்லாஹ் மன்னிப்பு வழங்கி அவர்களை சுவனத்து வாரிசுகளில் பதிவு செய்து கொள்வானாக எனப்பிரார்த்திக்கின்றேன்.***

*மாணவர் பெயர்: எம்.ஜே.எம். ரிஸ்வான்*

*பதிவு இலக்கம்:* HD/ MA/ 08-09-/559

## المصادر والمراجع: உஸாத்துணைகள்.

### அரபு நூல்கள்:


1- القرآن الكريم

2- صحيح البخاري

3- سنن أبي داود

4- عدنان محمد أمامة ، التجديد في الفكر الإسلامي (رسالة جامعية و كتاب الكتروني) دار ابن الجوزي- الدمام – المملكة العربية السعودية

5- الشحوذ ، علي بن نايف : أسلمة المعرفة

6- الشحوذ ، علي بن نايف : موسوعة البحوث والمقالات العلمية موسوعة البحوث والمقالات العلمية

7- الشحوذ ، علي بن نايف : الحضارة الإسلامية بين أصالة الماضي وآمال المستقبل


### கட்டுரைகள்- ஆக்கங்கள்


«أسلمة المعرفة» نجاحات جزئية وإشكاليات منهجية – بعد مرور أكثر من ثلاثة عقود على انطلاقتها كتب: غازي كشميم الجمعة 2013/05/03


### இணையத் தளங்கள்:


1- أسلمة – ويكيبيديا، الموسوعة الحرة – ويكيبيدياWikipedia ar.wikipedia.org/wiki

2- http://www.alukah.net/Sharia/0/7442/#ixzz2SxfUhjiO

3- http://www.ahlalhdeeth.com/vb/showthread.php?t=248209

4- http://www.alukah.net/Sharia/0/7442/#ixzz2SxfUhjiO

5- http://www.al-madina.com/node/450683?risala

6- *www.ibrahimragab.com/ismail-18*

7- ibndy@hotmail.com

8- http://www.alriyadh.com/iphone/article/33937